Literacy for a Billion

Movie: Maanja Velu
Year: 2010

Song: Unnai Ninaicha
Lyricist: Vaali

உன்னை நினைச்சா
உதறல் எடுக்கும்
உயிரின் மேலே
காதல் அடிக்கும்
லட்சம் தேனி
மனசை கடிக்கும்
இருந்தும் அதுதான்
எனக்கு பிடிக்கும்
எப்படித்தான்
மொறைச்சு பேசினாலும்
உன்மேல
எனக்கு இல்ல கோபம்
உன்னருகே
நிழலா வர தாகம்
அடி தரை வரை புரளும்
பளபள பின்னல்
அழகிய கருநாகம்
உன் பார்வை
கிடைத்தால் அது யோகம்
எப்படித்தான்
மொறைச்சு பேசினாலும்
உன்மேல
எனக்கு இல்ல கோபம்
உன்னருகே
நிழலா வர தாகம்
என்னை வரச் சொன்ன
அந்த நொடி
என் உயிர் ஆனது ரெடி
அடி இருந்தாலும்
ஒரு குறும்பாக அதை
விரும்பாததாய் நடிப்பேனே

விளையாடினால்
வினையாகுமா பூவே
ஒரு நடுநிசி இரவிலும்
அழைத்துப் பாரு
அருகே இருப்பேனே
என்னோட
தொழிலே அதுதானே
பெரு உலா வெல்லுகிற நிலா
உன் உடல் தாங்குமே பலா
என் உயிர் வேறு
உந்தன் உயிர் வேறு என
ஒரு நாளும் நான் நினைப்பேனா
எதற்காகவும் உன்னை
நீங்கவே மாட்டேன்
அடி சிரிப்பொ கலந்து
சிணுங்கும் பொழுது
சிதறி விழுந்தேனே
உன் கூந்தல்
பிடித்து எழுந்தேனே
எப்படித்தான்
மொறைச்சு பேசினாலும்
உன்மேல
எனக்கு இல்ல கோபம்
உன்னருகே
நிழலா வர தாகம்
அடி தரை வரை புரளும்
பளபள பின்னல்
அழகிய கருநாகம்
உன் பார்வை
கிடைத்தால் அது யோகம்
எப்படித்தான்

உன்மேல
உன்னருகே
அழகிய கருநாகம்

உன் பார்வை
கிடைத்தால் அது யோகம்

Disclaimer: PlanetRead does not own these lyrics and is not using them for any commercial purpose. For over 20 years, PlanetRead has been subtitling Bollywood songs for mass literacy. These lyrics are being offered as part of PlanetRead's literacy development initiative.